# BEC REFLECTION PAPER FOR DECEMBER 2017

முக்கியக் கருப்பொருள்: நம்பிக்கை சீடானாய் இரு

துணைக் கருப்பொருள்: கிறிஸ்து நமது நம்பிக்கை

**தொடக்கப் பாடல்:**

**தொடக்கச் செபம்**: அதிச உறுப்பினர்களில் ஒருவரை தொடக்கச் செபம் சொல்ல அழைக்கலாம்.

**கலந்துரையாடல்**

**குழப்பத்தில் உலகம்**

உலகம் குழப்பத்தில் இருக்கிறது. இந்த பூமியில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஜூன் மாத வரை குறைந்தது 622 பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. இது ஒன்றும் புதியதல்ல. கடந்த உலகப் போர்களின் அட்டூழியம், மத்திய கிழக்கில் தொடரும் சர்ச்சை, ஐரோப்பிய பேரரசு, சித்ரவதை மற்றும் இன ஒழிப்பு அலைகள், இந்த சம்பவங்க்ள அனைத்தும், நூறு இல்லை ஆயிரம் ஆண்டுகள் பின்னுக்குக் கொண்டு செல்கின்றன.

நாம் அனைவரும் தெளிவடைந்துள்ளோம் என நம்புகிறோம். நமது பழைய வன்செயல் வழிகளை கடந்து வந்துள்ளோம். ஆனாலும் நாம் நிலைகுலைந்து நிற்றோம். நாமும் சாதாரண மனிதர்களே, மனம் துடைந்து போகிறோம். எப்போதும் சண்டையில் சர்ச்சையில் குழப்பத்தில் சிக்கிக் கொள்கிறோம்.

**நம்பிக்கை உள்ளளதா?**

ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இதே கேள்வியைதான் மக்கள் கேட்டார்கள். பயங்கரவாதிகள் மட்டும் வழி தடுமாறி, பாவத்தில் விழவில்லை என்பதை இயேசு புரிந்து வைத்திருந்தார். அதில் நாம் அனைவரும் அடங்குவோம். நாமும் வழி தவறியுள்ளோம். தற்பெருமைக்கும் ஆத்திரத்திற்கும் காமத்திற்கும் நாம் ஆட்கொள்ளப்படுகிறோம். மற்றவர்களை விட நன்மை அடைவதற்கு உண்மையை மறைக்கிறோம், ஏமாற்றுகிறோம், இதில் நாம் எல்லோரும் தோல்வி அடைகிறோம். நாம் தவறு இழைத்து விட்டோம்.

உலகத்தின் மிகப்பெரிய பிரச்னைகளை எல்லாம், இராணுவ ஆயுதங்களைக் கொண்டு இயேசு தீர்க்கவில்லை. மாறாக சிலுவையாலும் காலி கல்லறையாலும் அதனைச் சாதித்தார். மீண்டும் உயிர்த்தெழுந்து, தமது சிறப்புக் கட்டளையை நிறைவேற்றுமாறு திருச்சபைக்குப் பணித்தார். உலகெங்கும் போய், ஒவ்வொரு மனிதனிடமும் சமூகத்திடமும் நற்செய்தியை அறிவி!

ஆயினும், நாம் அனைவரும் சூழ்ச்சியிலும் வஞ்சனையிலும் சிக்குண்டு--- தார்மீக, சமய, அரசியல், முதலியவற்றில் அல்லறுகிறோம். இவற்றிலிருந்து விடுபட்டு, சாந்தியும் சமாதானமும் காண்பதற்கு இயேசுவுடன் தனிபட்ட முறையில் உறவு கொள்ள வேண்டும். அவர் அழைக்கிறார், நம்பிக்கை பெறும் இல்லத்திற்கு வரவேற்கிறார்.

இந்த நம்பிக்கையை நோக்கி நமது எண்ணம் செல்ல வேண்டுமென 2016ம் ஆண்டு திருவருகை செய்தியில் திருத்தந்தை கூறியிருக்கிறார். "நம்பிக்கை என நாம் பேசும் போது நமது சக்திக்குட்பட்ட ஒன்று என நாம் நினைக்கிறோம். ஆனால் , நாம் ஏங்கி நிற்கும் நம்பிக்கை, நமது மனித சக்திக்கும் அறிவுக்கும் அற்பாட்டது" என அவர் கூறுகிறார்.

**ஆம், நம்மிடம் நம்பிக்கை உண்டு**

"உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன்"(யோவான்16:33) என்ற இயேசுவின் வார்த்தையில் நமது நம்பிக்கை காணக்கிடக்கிறது.

ஆம், நம்மிடம் நம்பிக்கை உண்டு. டுயேசுவோடு சேர்ந்து நாம் உலகத்தை வெற்றிக் கொள்வோம்!

**பகிர்வுக்கான கேள்வி**

- நமது சமூகத்தில் அல்லது நாட்டில் நிதி நெருக்கடி மற்றும் இயற்கை சீற்றத்தால், எங்கு குழப்பம், கலவரம், துயரம் அல்லது பேரிடர் நிகழ்ந்துள்ளது?
- இம்மாதிரியான சூழ்நிலைகளில் நம்பிக்கையை எவ்வாறு நம்மால் ஏற்படுத்த முடியும்?

**வாசகம் - உரோமர் 8 : 22-25**

இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம். படைப்பு மட்டும் அல்ல, முதல் கொடையாகத் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டுள்ள நாமும் கடவுள் நம்மைத் தம் பிள்ளைகளாக்கப்போகும் நாளை, அதாவது நம் உடலை விடுவிக்கும் நாளை எதிர்நோக்கிப் பெருமுச்சு விடுகிறோம். நமக்கு மீட்புக் கிடைத்து விட்டது. எனினும், எதிர்நோக்கும் அளவில்தான் அது கிடைத்துள்ளது. கண்ணுக்குத் தெரிகிறதை நோக்குதல் எதிர்நோக்கு ஆகாது. ஏற்கனவே கண்ணால் காண்கிறதை எவராது எதிர்நோக்குவரா? நாமோ காணாத ஒன்றை எதிர்நோக்கி இருக்கும் போது அதற்காக தளரா மனத்தோடு காத்திருக்கிறோம்.

**<u>சிந்தனை</u>**

1. வாசகத்தை மூன்று முறை படியுங்கள்
2. நம் மனதில் ஆண்டவர் பேசவதைக் கேட்க, மூன்று நிமிடத்திற்கு மௌனமாக காப்போம்.
3. உங்கள மனதைத் தொட்ட வார்த்தை/வசனம் குறித்துப் பகிர்ந்து கொள்ளலாம்?
4. நமது குழுவிற்கு இந்த வாசகத்திலிருந்து வாழ்வுத்தரும் வார்த்தை தேர்வு செய்யவும்,

**<u>செயல்</u>**

<u>குழப்பத்தால் அல்லது சிக்கலால் அவதிப்படுவோருக்கு நமது அதிச நம்பிக்கையைக் கொண்டு வர அதிச என்ற முறையில் நாம் முயற்சிப்போம். இதனால் நமது சமூகத்தின் நம்பிக்கையின் சின்னமான கிறிஸ்துவைக் கொண்டாடுவோம்.</u>

**இறுதிச் செபம்**: மற்றொரு அதிச உறுப்பினரை இறுதிச் செபம் சொல்ல அழைக்கலாம்

**இறுதிப் பாடல்:**